முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டு தொழினுட்பவியலாளர்கள் கழகம்

## திறமை (திறன்கள்) கப்ஸ்ரோன் - 2016 சனவரி

## (SS2) தகவல் தொழினுட்பவியல் திறன்கள்

(Information Technology skills)

2016-02-06
பிற்பகல்
[1.45 – 5.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட நேரம் :*** *வாசித்தல் - 15 நிமிடங்கள்*

*எழுதுதல் - 03 மணித்தியாலம்*

பக்கங்கள் : 12
வினாக்கள் : 07

(2) ***வினாத்தாள் கட்டமைப்பும் புள்ளிகள் ஒதுக்கீடும் :***

| பகுதி | தேவைப்பாடு | புள்ளிகள் |
|---|---|---|
| A | சகல வினாக்களும் கட்டாயமானவை | 40 |
| B | ஆறு வினாக்களில் நான்கிற்கு மட்டும் விடையளித்தல் வேண்டும். | 60 |
| **மொத்தப் புள்ளிகள்** | | **100** |

(3) *வழங்கப்பட்டுள்ள* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த* ***மொழி மூலத்திலேயே விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*

---

## <u>பகுதி A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

இருபது (20) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

***1.1*** *முதல்* ***1.10*** *வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடைக்குரிய இலக்கத்தை வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக.*

**1.1** பின்வருவனவற்றுள் மைக்ரோசொப்ற் அக்ஸஸ் (Microsoft Access) இல் தரவு வகை “AutoNumber” இன் மூலம் ஆற்றப்படும் பணியினைச் சரியாக விளக்குகின்ற வாக்கியம் எது?

(1) இது, புலம் (field) ஒன்றினுள், எழுத்து முதல் எண் ஈறாக உள்ளீடு செய்யப்படுகின்ற தரவினை தன்னியக்கமாக வடிவமைத்துச் செல்கின்ற ஒரு தரவு வகை ஆகும்.

(2) எங்களுக்கு புலம் ஒன்றில் எழுந்தமானமாக இலக்கங்களைப் பிறப்பிக்கவேண்டி ஏற்படும்போது இது பயன்படுத்தப்படுகிறது.

(3) எங்களுக்கு எண் பெறுமானத்தைத் (Numeric counter) தன்னியக்கமாக அதிகரித்துச் செல்வதற் கான தேவை ஏற்படும்போது இது பயன்படுத்தப்படுகிறது.

(4) புலம் ஒன்றினுள் உள்ளீடு செய்யப்படுகின்ற எண்களை கிட்டிய முழு எண்ணுக்கு மட்டந் தட்டுவதன் மூலம் வடிவமைப்பதற்கு இது பயன்படுத்தப்படுகின்றது.

**1.2** விரிதாள் (spread sheet) ஒன்றில் D1 என்ற கூடு (cell D1) குறித்த பெறுமதி ஒன்றினைக் கொண்டிருப்பதாகக் கருதுக. எங்களுக்கு கூடு D1 இல் உள்ள பெறுமதியைவிட 5% அதிகமான பெறுமதியை கூடு D2 இல் பெற வேண்டிய தேவை இருப்பின், நாங்கள் கூடு D2 இல் தட்டெழுத்திட வேண்டிய சூத்திரம் :

(1) =D1*1.05 (2) =D1*1105

(3) =D1*0.95 (4) =D1*95/10

**1.3** பின்வரும் சொற்றொடர்களில் மைக்ரோசொப்ற் வேட் (Microsoft Word) இல் உள்ள நிகண்டு (Thesaurus) அம்சங்களின் நோக்கத்தைச் சரியாக விபரிப்பது எது?

(1) ஆவணத்தின் எழுத்துப் பிழைகளைச் சோதிப்பதற்கு

(2) ஆவணத்திலுள்ள சொற்களின் எண்ணிக்கையை எண்ணுவதற்கு

(3) நீங்கள் தெரிவுசெய்த சொல் ஒன்றின் ஒத்த கருத்தைக் கொண்டுள்ள வேறு சொற்களைப் பரிந்துரைப்பதற்கு

(4) ஆவணத்தை வேறொரு மொழியில் மொழி பெயர்ப்பதற்கு

**1.4** "மைக்ரோசொப்ற் பவர்பொயின்ட் (Microsoft Powerpoint) இலுள்ள இந்த அம்சம் முன்வைப்பு (presentation) ஒன்றினைச் செய்யும்போது முன்வைப்பாளருக்கு (presenter) உரை (எழுத்து) வடிவத் தகவல்களைச் சேர்த்துக் கொள்வதற்கு உதவியாக இருக்கும், ஆயினும் இது பார்வையாளர்களுக்கு (audience) தோற்றமளிக்காது". மேலுள்ள விவரணத்துடன் தொடர்புபட்ட மைக்ரோசொப்ற் பவர்பொயின்ட் இன் அந்த அம்சம் பின்வருவனவற்றுள் எது?

(1) பட வில்லை (slide) ஒன்றின் மேற்குறிப்பிற்கு (header) உரை ஒன்றினைச் சேர்த்தல்

(2) பட வில்லை ஒன்றின் உரைப் பெட்டிக்கு (Text box) உரை ஒன்றினைச் சேர்த்தல்

(3) பட வில்லை ஒன்றுடன் ஒலியினை பதிவு செய்தல்

(4) பட வில்லை ஒன்றின் குறிப்புகள் பகுதிக்கு உரை ஒன்றினைச் சேர்த்தல்

**1.5** மின்னஞ்சல் (ஈ மெயில்) ஒன்றில் இணைப்புகளைப் (attachments) பயன்படுத்துவது தொடர்பான சரியான கூற்றினைத் தெரிவு செய்க.

(1) மின்னஞ்சலில் இணைப்புச் செய்யப்படும் கோப்புகளுக்கு எடை (file size) மட்டுப்பாடுகள் இல்லை.

(2) மின்னஞ்சல் மூலமாக இணைப்பு ஒன்றினை பல பெறுநர்களுக்கு ஒரே நேரத்தில் அனுப்ப முடியும்.

(3) மின்னஞ்சல் ஒன்று, ஒரேயொரு கோப்பினை மட்டுமே இணைப்பாகக் கொண்டிருக்க முடியும்.

(4) சகல மின்னஞ்சல் சேவையகங்களும் (servers) நச்சு நிரல்களைச் (viruses) சோதிப்பதற்காக தங்களுக்கு அனுப்பப்பட்ட மின்னஞ்சல்களைத் தன்னியக்கமாகவே வருடல்(scan) செய்கின்றன.

**1.6** மாணவன் ஒருவன் புதிதாக வெளியீடு செய்யப்பட்ட புத்தகம் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்காக இணையப் புத்தகக் கடை ஒன்றினை அணுகுவதற்கு முயற்சிக்கிறான். அந்தக் கடையின் இணையத்தள முகவரி http://www.topbooks.com ஆக இருப்பின், இங்கு காட்டப்பட்ட "http" குறிப்பது,

(1) IP Address (2) Domain Name (3) Host Name (4) Protocol

**1.7** நிதிச் சேவைகள் கம்பனி ஒன்றில் ஒரு கணக்காளராகப் பணி புரிகின்ற **திரு. சில்வா,** புதிய விண்டோஸ் 7 தொழில்சார் பதிப்பு DVD ஒன்றை ஓடர் செய்திருந்தார். கொள்வனவு செய்யப்பட்ட DVD இன் உறையானது, XYX4H-34HDR-23DFE-PQ3E2-ED342 போன்ற 25 எழுத்துக்களைக் கொண்ட முப்பரிமாணப் படிமம் (hologram) ஒன்றுடன்கூடிய விசேட ஒட்டியினைக் (sticker) கொண்டிருந்தது. கம்பனியின் தகவல் தொழினுட்ப நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர் ஒருவர், 25 எழுத்துக்களைக் கொண்டிருந்த சிட்டையானது செயற்பாட்டு முறைமையினை (OS) (கணினியில்) நிறுவும்போது தேவைப்படும் என்பதால் அந்த ஒட்டியினைக் கவனமாக வைத்திருக்குமாறு அவரிடம் (திரு. சில்வா) கூறியிருந்தார். இந்த 25 எழுத்துக்களைக் கொண்ட சிட்டையை அடையாளப்படுத்துவதற்கு வழமையாகப் பயன்படுத்தும் பெயர்,

(1) கடவுச்சொல் (Password)

(2) தனிநபர் தகவல் எண் (Personal Information Number - PIN).

(3) உற்பத்திச் சாவி (Product Key)

(4) பயனர் (User) ID

**1.8** தற்போது வர்த்தக ரீதியில் கிடைக்கக்கூடியதாக இருக்கின்ற ERP மென்பொருள் ஒன்றுக்கான உதாரணமாக அமைவது பின்வருவனவற்றுள் எது?

(1) SAP.

(2) அடோப் போட்டோசொப்

(3) மைக்ரோசொப்ற் அவுட்லுக்

(4) IBM நோட்ஸ்

**1.9** பின்வருவன, நிறுவனம் ஒன்றில் பயன்படுத்தப்படுகின்ற சில தகவல் தொழினுட்ப உற்பத்திப் பொருட்களாகும். அவற்றுள், வருடாந்தப் பராமரிப்பு உடன்படிக்கை ஒன்றின் ஊடாக நிறுவனத்திற்கு அதிக அனுகூலத்தை வழங்குவது எது?

(1) ஒரு புளூடுத் விசைப்பலகை (Bluetooth Keyboard)

(2) நிமிடத்திற்கு 55 பக்கங்களை அச்சுப் பதிக்கக்கூடிய வண்ண லேசர் அச்சுப்பொறி(printer) ஒன்று

(3) ஒரு 7 அங்குல டப்லட் (tablet)

(4) ஒரு வெளிவாரி ப்ளூ - றே ரைட்டர் (Blu-ray Writer)

**1.10** பின்வருவனவற்றில் எந்த நடவடிக்கையை தகவல் தொழினுட்பவியல் முறைமைகளின் நெறிமுறை யின்படி ஏற்றுக்கொள்ள **முடியாத** பயன்பாடாகக் கருதலாம்?

(1) உமது முகாமையாளரின் அனுமதியுடன் கடவுச்சொல் பாதுகாப்புடன்கூடிய அலுவலக மேசைக் கணினி ஒன்றை Log in செய்தல்

(2) புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட அலுவலகத்தின் விதிகள் மற்றும் பிரமாணங்களை சகல அலுவலர்களுக்கும் அவர்களது உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரிகள் ஊடாகப் பகிர்தல்

(3) உமது தனிப்பட்ட திறன் பேசி (smartphone) தரவுகளை உமது அலுவலக மேசைக் கணினிக்கு காப்புப் பிரதி செய்தல் (Backup).

(4) உமது விண்டோஸ் 7 கணினிக்கு ஒரு பாதுகாப்பு இற்றைப்படுத்தலைத் (security update) தரவிறக்கம் செய்தல்

*அடைப்புக்குறிக்குள் தரப்பட்ட சொற்களைப் பயன்படுத்தி, இலக்கம் **1.11** தொடக்கம் **1.15** வரையிலான வினாக்களில் காணப்படுகின்ற இடைவெளிகளை நிரப்புக. அவ்வாறு தெரிவு செய்த விடைகளை உமது விடைப் புத்தகத்தில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதற்கு எதிரே எழுதுக.*

**1.11** கொள்வனவுக் கட்டளைகள் மீதான தரவுகளைக் கொண்டுள்ள ஒரு தரவுத் தளத்தில், கொள்வனவுக் கட்டளை இலக்கம் .............. (பிரதான புலம் (key field) / கடவுச்சொல்) ஆகப் பயன்படுத்தப் படுவதற்கான நல்லதொரு உதாரணமாகும். (02 புள்ளிகள்)

**1.12** கால வரன்முறையான காசுப் பாய்வுகளின் வரிசை மற்றும் கழிவு வீதத்தின் அடிப்படையில் மூலதனம் ஒன்றின் நிகர இற்றைப் பெறுமதியைக் கணிக்கக்கூடிய NPV .............. (புலம் [field] / பணிக்கூறு [function]) மைக்ரோசொப்ற் எக்ஸ்செல் இல் கிடைக்கக்கூடியதாக இருக்கிறது.

(02 புள்ளிகள்)

**1.13** அஞ்சல் நிரல் ஒன்றிலிருந்து எமது மின்னஞ்சலை அகற்றுவதற்கான தேவை ஏற்படும்போது .............. (பதிவு நீக்குதல் [Unsubscribe] / வடிகட்டுதல் [Filter]) நடவடிக்கையினை நாங்கள் மேற்கொள்ள வேண்டும்.

**1.14** மைக்ரோசொப்ற் வேட் இல் "Ω" போன்ற விசேட எழுத்தை உள்ளிடுவதற்கான தேவை ஏற்படின், நாங்கள் .............. (உரை பெட்டி [Text Box] / குறியீடு [Symbol]) எனப் பெயரிடப்பட்டுள்ள சிட்டையைச் (label) சொடுக்க (click பண்ண) முடியும்.

**1.15** மைக்ரோசொப்ற் பவர்பொயின்ட் இல் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற ஒரு முன்வைப்பைத் (Presentation) தற்காலிகமாக இடைநிறுத்தி, கறுப்புத் திரையினை ஏற்படுத்துவதற்கான தேவை எமக்கு ஏற்படின், எம்மால் விசைப்பலகையில் உள்ள .............. (எழுத்து B / வெளியேறல் [Esc]) விசையினை அழுத்துவதன் மூலம் அதனைச் செய்ய முடியும்.

*கீழே வினா இல. **1.16** தொடக்கம் **1.20** வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும் சரியானதா அல்லது பிழையானதா எனக் கூறுக. உமது விடைப் புத்தகத்தில் வினா இலக்கத்தை எழுதி அதற்கு எதிரே தெரிவு செய்யப்பட்ட விடைகளை (சரியானது / பிழையானது) எழுதவும்.*

**1.16** கம்பனிக் கணக்குகளுடன் தொடர்புபட்ட இரகசியத் தரவுகளை மைக்ரோசொப்ற் 2010 தரவுத்தளம் ஒன்றில் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கான தேவை ஏற்படும்போது, எம்மால் கடவுச் சொல் ஒன்றினைப் பயன்படுத்தித் தரவுத்தளத்தைப் பாதுகாக்க முடியாது.

**1.17** தரவு உள்ளீடு செய்யப்படுகின்ற கூடு (cell), நாங்கள் தட்டெழுத்திடும்போது செயற்பாட்டிலுள்ள கூடு என அழைக்கப்படுவதுடன் அது தடிப்பான எல்லைக்கோடு ஒன்றினால் எல்லைப்படுத்தப்படுகிறது.

**1.18** புத்தகம் போன்ற பொருள் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு இணையத்தின் மூலம் கொடுப்பனவு செய்வதற்கான தேவை ஏற்படும்போது, எமது ATM (தன்னியக்க காசளிப்பு இயந்திரம்) அட்டையின் PIN (தனிப்பட்ட அடையாள இலக்கம்) தெரிந்திருத்தல் வேண்டும்.

**1.19** 2015 சனவரி தொடக்கம் 2015 டிசெம்பர் வரையான 12 மாத காலப்பகுதிக்கான விற்பனை அளவுகளைக் கொண்ட அட்டவணையொன்று மைக்ரோசொப்ற் வேட் ஆவணம் ஒன்றில் காணப்படும்போது, "=SUM()" என்னும் சூத்திரத்தைத் தட்டச்சிடுவதன் மூலம் அந்த வருடத்திற்கான மொத்த விற்பனையைத் தன்னியக்கமாகக் கணிப்பிட்டுக்கொள்ள முடியும்.

**1.20** மைக்ரோசொப்ற் பவர்பொயின்ட் ஐப் பயன்படுத்தி விருத்தி செய்யப்பட்ட முன்வைப்புகளுக்கு PPT, PPTX, PPS, PPSX ஆகிய அனைத்தும் செல்லுபடியான நீட்சிகள் (valid extensions) ஆகும்.

(02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A முடிவுற்றது*

# <u>பகுதி B</u>

ஏதாவது நான்கு (04) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

(மொத்தம் 60 புள்ளிகள்)

## வினா 02

(a) மைக்ரோசொப்ற் பவர்பொயின்ட் இன் Add-ins இனால் ஆற்றப்படும் பணியின் நோக்கத்தைச் சுருக்கமாக **விளக்குக**. (02 புள்ளிகள்)

(b) நீர் வேலை செய்யும் கம்பனியை அறிமுகப்படுத்தி, மைக்ரோசொப்ற் பவர்பொயின்ட் முன்வைப்பு (presentation) ஒன்றினை நீர் உருவாக்கியிருப்பதாகக் கருதுக.

ஒத்திகைக் காலத்திட்ட அமைப்பு (Rehearse timings) என்ற தெரிவின் மூலம் ஆற்றப்படுகின்ற பணிகளை **விளக்குக.** நீர் உமது முன்வைப்பினை உருவாக்கும்போது பயன்படுத்துவதற்கு, இது ஏன் பிரயோசனமானதாக இருக்கிறது? (03 புள்ளிகள்)

(c) பவர்பொயின்ட் முன்வைப்பு ஒன்றினை, சாதாரண தோற்றம் (Normal View), பட வில்லைக் காட்சித் தோற்றம் (Slide Show View) மற்றும் வரிசைப்படுத்தப்பட்ட பட வில்லைத் தோற்றம் (Slide Sorter View) போன்ற பல சாத்தியமான தோற்றங்களில் பார்க்கலாம்.

மேற்கூறப்பட்ட மூன்று (03) தோற்றங்களையும் (views) **வேறுபடுத்துக**. (06 புள்ளிகள்)

(d) நீர் வேலை செய்யும் கம்பனியின் பணிப்பாளர் சபைக்கு விற்பனை தொடர்பான அறிக்கை ஒன்றை நீர் முன்வைப்புச் செய்யவேண்டியிருப்பதாகக் கருதுக. இந்த நோக்கத்திற்காக உமது தனிப்பட்ட மேசைக் கணினியில் மைக்ரோசொப்ற் பவர்பொயின்ட் முன்வைப்பு (presentation) ஒன்றினை நீர் உருவாக்கியுள்ளீர். அந்த முன்வைப்பினை, முன்வைப்பு செய்யப்படுகின்ற குழும அறைக்கு (boardroom) ஒரு USB தகவல் சேகரிப்பான் (flash drive) மூலம் கொண்டு செல்வது உமது திட்டமாகும். எவ்வாறாயினும், குழும அறையில் நீர் முன்வைப்புச் செய்வதற்காகப் பயன்படுத்த எண்ணியிருக்கும் கணினியில் மைக்ரோசொப்ற் பவர்பொயின்ட் நிறுவப்பட்டுள்ளதா என உமக்கு உறுதியாகத் தெரியவில்லை. குழும அறையிலுள்ள கணினியில் பவர்பொயின்ட் ஐ நிறுவுவதற்கான மைக்ரோசொப்ற் ஒப்பிஸ் DVD / மென்பொருள் உம்மிடம் இல்லை எனவும் அது வலையமைப்புடன் தொடர்புபடுத்தப்படாத கணினி எனவும் கருதிக் கொள்க.

உமது முன்வைப்பினைச் செய்வதற்கு உம்மால் பயன்படுத்தக்கூடிய இரண்டு (02) முறைகளை **விளக்குக.** உம்மால் ஏதாவது எடுகோள்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அவற்றையும் **குறிப்பிடுக.**

(04 புள்ளிகள்)
(மொத்தம் 15 புள்ளிகள்)


## வினா 03

(A) கீழே காட்டப்பட்டுள்ள படங்கள், வரைபடங்களின் வகைகளைக் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இவை, மைக்ரோசொப்ற் எக்ஸல் (Microsoft Excel) இல் தரவுகளைக் காட்சிப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட முடியும். இவை ஒவ்வொன்றையும் **அடையாளங் காண்க.**


(a)




(b)



(c)



(d)



(e)



(05 புள்ளிகள்)

(B) ***லயன் டீ (தனி) கம்பனி*** தனது ஊழியர்களுக்கு மிகை ஊதியம் (bonus) வழங்கத் திட்டமிட்டிருக்கிறது. கீழே காட்டப்பட்டுள்ள விரிதாள் அவர்களது ஊழியர்களின் தரவினைக் கொண்டிருக்கிறது.

| | A | B | C | D | E | F | G | H | I | J |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | ஊழியர் செயலாற்றுகை 2015 | | | | | | | | |
| | | | | | | மிகை ஊதியம் | | | | |
| 2 | **ஊழியர் இலக்கம்** | **2015 காலப் பகுதியில் செய்யப்பட்ட வேலைகளின் மொத்த மணித்தியாலம்** | **லீவு எடுத்த நாட்களின் எண்ணிக்கை** | **தற்போதைய அடிப்படைச் சம்பளம்** | **சேவையில் உள்ள வருடங்களின் எண்ணிக்கை** | **கடின வேலை** | **வரவு** | **உப மொத்தம்** | **பெருக்கும் எண் (Multiplier)** | **மொத்த மிகை ஊதியம்** |
| 3 | E1255 | 1,500 | 5 | 25,000.00 | 4 | 0 | 13,500 | 13,500 | 0.1 | 14,850 |
| 4 | E1258 | 1,900 | 13 | 20,000.00 | 7 | 20,000 | 1,500 | 21,500 | 0.4 | 30,100 |
| 5 | E1251 | 1,680 | 1 | 30,000.00 | 5 | | | | | |
| 6 | E1267 | 1,780 | 10 | 45,000.00 | 10 | | | | | |
| 7 | E1275 | 1,980 | 5 | 28,000.00 | 1 | | | | | |
| 8 | E1280 | 1,890 | 6 | 40,000.00 | 4 | | | | | |
| 9 | E1293 | 1,500 | 8 | 38,000.00 | 3 | | | | | |
| | | | | | | | | | | |

மிகை ஊதியம் பின்வருமாறு கணிப்பிடப்படுகிறது :

(i) 2015 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 1,600 மணித்தியாலங்களுக்கும் மேலதிகமாக வேலை செய்திருக்கும் ஊழியர்கள், அவர்களது கடின வேலை காரணமாக அவர்களது மிகை ஊதியத்திற்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட ரூ. 20,000/- இனைப் பெறுவார்கள்.

(ii) ஒவ்வொரு ஊழியருக்கும் சம்பளத்துடன்கூடிய 14 லீவு நாட்கள் வழங்கப்படுகின்றன. சகல பயன்படுத்தப்படாத சம்பளத்துடனான லீவுகளுக்கும் நாள் ஒன்றுக்கு ரூ. 1,500/- என்றவாறு மீளளிப்புச் செய்யப்படுகிறது.

(iii) மூன்று வருடங்களுக்கும் மேலாக சேவையில் இருக்கின்ற சகல ஊழியர்களுக்கும், உப மொத்த மிகை ஊதியமானது மூன்று வருடங்களுக்கு மேற்படாதவாறு, சேவையில் இருந்த ஒவ்வொரு வருடத்திற்காகவும் 0.1 எனும் காரணியால் பெருக்கப்படுகிறது. (மிகை ஊதியத்தைப் பெருக்கும் எண்).

(iv) ஊழியர் ஒருவருக்கு வழங்கப்படும் உயர்ந்தபட்ச மொத்த மிகை ஊதியம் ரூ. 45,000/- ஆக வரையறுக்கப்பட்டுள்ளது.

விரிதாள் ஒன்றில் பயன்படுத்தப்படுகின்ற பணிக்கூறுகள் (function) மற்றும் சூத்திரங்களில் (formulas) நீங்கள் கொண்டுள்ள அறிவைப் பிரயோகிப்பதன் மூலம் மேற்படி தாளில் நிழற்றிக் காட்டப்பட்டுள்ள கூடுகளான F5, G5, H5, I5, J5 ஆகியவற்றுக்கான சூத்திரங்கள் / பணிக்கூறுகளை **அடையாளங் காண்க.**

உரிய கூடுகளுக்கு தொடர்புடையதாகப் பயன்படுத்தப்பட வேண்டிய இந்தச் சூத்திரங்கள் / பணிக்கூறுகள், மிகை ஊதியத் தலைப்பின் கீழ் காட்சிப்படுத்தப்பட்ட மாதிரிப் பெறுமதிகளைப் பெறுவதற்காக மேலேயுள்ள வரிசைகளுக்கு (வரிசை 3 மற்றும் வரிசை 4) பிரதிபண்ணப்பட முடியும். (10 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 04

உமது நண்பர் ஒருவர் புதிய முயற்சி ஒன்றினை ஆரம்பிப்பதற்குத் திட்டமிட்டுள்ளார். அவர் இணையவழி புத்தகக் கடை ஒன்றினைத் திறப்பதா அல்லது பௌதிக ரீதியாக புத்தகக் கடை ஒன்றினைத் திறப்பதா எனச் சிந்திக்கிறார்.

(a) மரபு ரீதியான புத்தகக் கடை ஒன்றினை ஆரம்பிப்பதிலும் பார்க்க இணையவழி புத்தகக் கடை ஒன்றினை ஆரம்பிப்பதில் காணப்படுகின்ற மூன்று (03) அனுகூலங்களைக் **கூறுக.** (03 புள்ளிகள்)

(b) மரபு ரீதியான புத்தகக் கடை ஒன்றினை ஆரம்பிப்பதிலும் பார்க்க இணையவழி புத்தகக் கடை ஒன்றினை ஆரம்பிப்பதில் காணப்படுகின்ற மூன்று (03) பிரதிகூலங்களைக் **கூறுக.** (03 புள்ளிகள்)

(c) ஏற்கனவே செயற்பாட்டில் இருக்கின்ற பிரசித்தமான இணையவழிப் புத்தகக் கடை ஒன்றினை **அடையாளங் காண்க.** (02 புள்ளிகள்)


(d) உமது நண்பர் ஒரு இணையவழி புத்தகக் கடையைத் திறப்பதற்குத் தீர்மானித்திருப்பின், எவ்வாறு அவரால் கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்ள முடியும் என்பதை **விளக்குக**. (03 புள்ளிகள்)

(e) உமது நண்பர் தனது இணையவழி புத்தகக் கடையை ஊக்குவிப்பதற்கு (விளம்பரப்படுத்துவதற்கு) முகப்புத்தகம் போன்ற சமூக ஊடக வலைத்தளங்களை எவ்வாறு பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பதை **விளக்குக**. (04 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 05

கீழே காட்டப்பட்டுள்ள படம் சொல் நிரற்படுத்தல் (Word Processing) மென்பொருளைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட ஒரு துண்டுப்பிரசுரத்தை காட்டுகிறது.




படம் 1

கீழே (a) தொடக்கம் (g) வரை அம்புக்குறிகள் மூலம் அடையாளங் காணப்பட்ட ஒவ்வொரு கொள்பணியினையும் நிறைவு செய்வதற்கு நீங்கள் பயன்படுத்த வேண்டிய சொல் நிரற்படுத்தல் அம்சங்களை, தரப்பட்ட உதாரணத்தை வழிகாட்டியாகக் கொண்டு **விளக்குக**.

நீர், உமது மென்பொருளாக மைக்ரோசொப்ற் வேட் (Microsoft Word) இனை பயன்படுத்தியுள்ளீர் எனக் கருதிக்கொள்க. அத்துடன் கீழேயுள்ள படக் கோப்பு (படம் 2) நீர் இந்தக் கொள்பணிக்காகப் பயன்படுத்திய கணினியின் வன் தட்டில் (hard disk) சேமிக்கப்பட்டிருக்கிறது எனவும் கருதிக்கொள்க.



***படம் 2***

நீர் எழுத்துருவின் அளவை (font size) அல்லது எழுத்துருவின் முகப்பு (font face) மாற்றங்களைக் குறிப்பிட வேண்டியதில்லை.

**உதாரணம் :**

வினா : துண்டுப்பிரசுரத்தின் சகல நான்கு பக்கங்களிலும் 1 cm அளவுள்ள ஓரங்களை எடுப்பதற்கு

விடை : மெனுவைப் பயன்படுத்தி, **Page Layout > Margins > Picture > Custom Margins** என்றவாறு சென்று மேல், கீழ், இடது மற்றும் வலது பக்க ஓரங்களை 1 cm இற்கு சரிசெய்க.

(a) வளைந்த வடிவத்தில் தோன்றுகின்ற “Stock Clearance Sale!” இனைப் பெறுவதற்கு (படம் 1 இல் “a” என அடையாளப்படுத்தப்பட்ட அம்புக்குறியைப் பார்க்க.) (02 புள்ளிகள்)

(b) காட்சிப்படுத்தப்பட்ட படத்தினைப் பெறுவதற்கு (படம் 1 இல் “b” என அடையாளப்படுத்தப்பட்ட அம்புக்குறியைப் பார்க்க.) குறிப்பு : இந்தப் பக்கத்தில் தரப்பட்ட மூலப் படத்திலிருந்து முன்னைய பக்கத்தில் பார்த்த படத்தைக் காட்சிப்படுத்துவதற்குத் தேவையான சகல கொள்பணிகளையும் நீர் குறிப்பிடுதல் வேண்டும். (03 புள்ளிகள்)

(c) காட்சிப்படுத்தப்பட்டுள்ள “All Major Brands Panasonic, Sony, LG, Philips, Samsung Sizes from 20 inch to 50 inch” என்னும் உரைப் பகுதியைப் பெறுவதற்கு (படம் 1 இல் “c” என அடையாளப் படுத்தப்பட்ட அம்புக்குறியைப் பார்க்க.) (02 புள்ளிகள்)

(d) காட்சிப்படுத்தப்பட்டுள்ள “Hurry, Sale ends on 25th January 2016” என்னும் உரைப் பகுதியைப் பெறுவதற்கு (படம் 1 இல் “d” என அடையாளப்படுத்தப்பட்ட அம்புக்குறியைப் பார்க்க.) (02 புள்ளிகள்)

(e) பெட்டி அடைப்பினுள் காணப்படுகின்ற “Great Bargains on LCD TVs. Don’t miss this once in a lifetime chance to get your hand on a brand New LCD TV” என்னும் உரைப் பகுதியைப் பெறுவதற்கு (படம் 1 இல் “e” என அடையாளப்படுத்தப்பட்ட அம்புக்குறியைப் பார்க்க.) (02 புள்ளிகள்)

(f) 50% off என்பதற்குப் பின்னால் சற்று மேலே காட்சிப்படுத்தப்பட்டுள்ள “1” என்ற எண்ணைப் பெறுவதற்கும் பக்கத்தின் அடிப் பகுதியில் தொடர்புபடுத்தப்பட்ட உரைப் பகுதி ஒன்றை முன்னெடுக்கவும். (படம் 1 இல் “f” என அடையாளப்படுத்தப்பட்ட இரண்டு அம்புக்குறிகளையும் பார்க்க.) (02 புள்ளிகள்)

(g) துண்டுப்பிரசுரத்தின் வலது பக்கத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள கம்பனியின் பெயர் மற்றும் முகவரியைப் பெறுவதற்கு (படம் 1 இல் “g” என அடையாளப்படுத்தப்பட்ட அம்புக்குறியைப் பார்க்க.) (02 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 06

**திரு. செபலா பெரேரா, லயன் டீ (தனி) கம்பனியின்** முறைமைகள் நிர்வாகி (Systems Administrator) ஆவார். அவர் கம்பனியின் மனித வள முகாமையாளரான **திரு. ஓமர் ஹுசைன்** இடமிருந்து மின்னஞ்சல் ஒன்றைப் பெற்றிருக்கிறார். அந்தக் கடிதம் கீழே தரப்பட்டுள்ளது.

பெறுபவர் : செபலா பெரேரா (sperera@liontea.lk)

அனுப்புபவர் : ஓமர் ஹீசைன் (ohussain@liontea.lk)

திகதி : 2016 பெப்ரவரி 05.

விடயம் : புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட செயலாளருக்கான மின்னஞ்சல் முகவரி

அன்பின் செபலா,

முகாமைத்துவப் பணிப்பாளரின் செயலாளர் பதவிக்காக கடந்த வாரம் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட செல்வி. நளினி சில்வா (தே.அ.அ.இல.905024500V) இற்காக மின்னஞ்சல் முகவரி ஒன்றை உருவாக்கவும். அவர் 2016 பெப்ரவரி 08 ஆந் திகதி முதல் கடமையினை ஆரம்பிக்கிறார். மின்னஞ்சல் உருவாக்கப்பட்டதும் மின்னஞ்சலைப் பயன்படுத்துவது பற்றிய கம்பனிக் கொள்கை களை அவர் படிப்பதற்காக மின்னஞ்சல் விதிகளைக் கொண்ட DOC கோப்பினை இணைத்து அவருக்கு ஒரு ஆரம்ப மின்னஞ்சலை அனுப்பவும். வழமை போன்று, அவருக்கான ஆரம்ப கடவுச்சொல்லாக அவரது தே.அ.அ. இலக்கம் அமைக்கப்படுதல் வேண்டும். ஆரம்ப கடவுச் சொல்லை எவ்வாறு மாற்றியமைப்பது என்பது பற்றி அவருக்கு வழிகாட்டுவதற்காக மைக்ரோசொப்ற் வேட் ஆவணமொன்றினை தயவுசெய்து இணைக்கவும்.

மின்னஞ்சலின் பிரதிகளை எனக்கும் முகாமைத்துவப் பணிப்பாளருக்கும் அனுப்பவும்.

அன்புடன்,

ஓமர்.

ஊழியர்களின் முதற் பெயரிலுள்ள (first name) முதல் எழுத்தினை குடும்பப் பெயருடன் (surname) சேர்த்து வடிவமைப்பது என்ற **லயன் டீ கம்பனியில்** மின்னஞ்சல் முகவரிகளுக்கான கம்பனிக் கொள்கையானது சகல ஊழியர்களுக்கும் பயனர்பெயராகப் (username) பயன்படுத்தப்படுகிறது. மேலும், ஊழியர் கடமையினை ஆரம்பிக்கும்போது மின்னஞ்சல் முகவரி மற்றும் ஆரம்ப கடவுச்சொல் ஆகியவற்றை மனித வள முகாமையாளர் வழங்குவார்.

நீர் **திரு. செபலா பெரேரா** அவர்களது வகிபாகத்தைச் செயற்படுத்த வேண்டியிருப்பதாகவும் நீர் புதிய மின்னஞ்சல் மென்பொருளைப் பயன்படுத்துபவராகவும் உம்மைக் கருதிக்கொள்க. உமக்கு பின்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன :

- **லயன் டீ (தனி) கம்பனியின்** முகவரி : இல. 200, கிருள வீதி, நாரஹேன்பிட்டி,
  கொழும்பு 05, இலங்கை.
  தொலைபேசி : +94-11-2559900
- **லயன் டீ (தனி) கம்பனியின்** முகாமைத்துவப் பணிப்பாளர் - திரு. ரவி முரளிதரன்
- திரு. செபலா பெரேராவின் உத்தியோகபூர்வ தொலைபேசி இலக்கம் : +94-11-2559900 நீட்சி 1234.
- திரு. செபலா பெரேராவின் செல்லிடப்பேசி இலக்கம் : +94-77-1231000.

(a) 1 தொடக்கம் 8 வரை அடையாளப்படுத்தப்பட்ட பெட்டிகளில் வரவேண்டிய உரைகளை (texts) அடையாளங் காண்பதன் மூலம் மேலே தரப்பட்ட தகவல்களை தொடர்பாடல் செய்வதற்கு, மின்னஞ்சல்களை அனுப்புதல் மீதான உங்களது அறிவினைப் பிரயோகிக்க.

உங்கள் விடைப் புத்தகத்தில் ஒவ்வொரு பெட்டிக்குமான இலக்கங்களை எழுதி, அதற்கு எதிரே உரிய விடைகளை **எழுதுக.** அவற்றுள் ஏதேனுமொன்று வெற்றிடமாக விடப்பட வேண்டுமென நீங்கள் கருதினால், அத்தகைய இடத்தில் எதனையும் எழுத வேண்டாம்.

| | |
|---|---|
| To (பெறுபவர்) | ----------------------(1)-------------------------- |
| CC (காபண் பிரதி) | -----------------------(2)-------------------------- |
| BCC (குருட்டுக் காபண் பிரதி) | -----------------------(3)-------------------------- |
| Subject (விடயம்) | -----------------------(4)-------------------------- |

அன்பின் -------------------------(5)-------------------------

லயன் டீ கம்பனியின் தகவல் தொழினுட்பக் கிளை சார்பில் உங்களை வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

நீங்கள் எமது கம்பனியுடன் மிக நெருக்கமாக ஆவதன் மூலம், இது பல திறமையானவர்களையும் பலதரப்பட்ட வாய்ப்புகளையும் கொண்டுள்ள வேலை செய்வதற்கு அற்புதமானதும் துடிப்பானதுமான ஓர் இடம் என்பதைக் கண்டறிவீர்கள். நீங்கள் எமது அணியின் பிரிக்க முடியாத ஓர் அங்கமாக இருப்பீர்கள் என்பதை நாம் அறிவோம். அத்துடன் எமது கம்பனி வழங்கியிருக்கின்ற சகல அனுகூலங்களையும் நீங்கள் பெற வேண்டுமெனவும் எதிர்பார்க்கிறோம்.

கம்பனியில் நடைமுறையிலுள்ள மின்னஞ்சல் கொள்கைகளை விளக்குகின்ற ஆவணம் ஒன்றை இத்துடன் இணைத்துள்ளேன். தயவுசெய்து இதனை வாசிக்கச் சிறிது நேரம் செலவிடுங்கள். மேலும், உங்களுடைய ஆரம்பக் கடவுச்சொல்லை எவ்வாறு மாற்றியமைக்கலாம் என்பது பற்றிய அறிவுறுத்தல்களும் தனியான ஆவணம் ஒன்றில் இணைக்கப்பட்டுள்ளது.

ஏதாவது வினவல்கள் (சந்தேகங்கள்) இருப்பின், தயக்கமின்றி என்னைத் தொடர்பு கொள்ளவும்.

உண்மையுள்ள,

--------------------------(6)----------------------------------

| | |
|---|---|
| கையொப்பப் பகுதி | ----------------------(7)-------------------------- |
| இணைப்புகள் | -------------------------(8)------------------------ |

(09 புள்ளிகள்)

(b) தனித்துவமான (standalone) மின்னஞ்சல் வாடிக்கையாளர்களிடமிருந்து இணைய அடிப்படையிலான (web-based) மின்னஞ்சல் வாடிக்கையாளர்களை **வேறுபடுத்தி,** அவ்வொவ்வொரு வகைக்கும் இவ்விரு (02) உதாரணங்கள் தருக. (06 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 07

எகோ – மில்க் என்பது பால் விற்பனைக் கடையொன்றாக விரைவில் திறக்கப்படவுள்ளது. அவர்களுடைய உற்பத்திப் பொருட்களின் பட்டியலிலிருந்தான ஒரு பிரித்தெடுப்பு கீழே காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. கம்பனியானது உற்பத்திப் பொருட்களின் பட்டியலை கணினி தரவுத்தளம் ஒன்றில் சேமித்து வைப்பதற்குத் திட்டமிட்டிருக்கிறது.

| **உற்பத்தி வகை** | **உற்பத்திப் பெயர்** | **வழங்குநர்** | **எடை (g)** | **உலகளாவிய உற்பத்திக் குறியீடு** | **காலாவதியாகும் திகதி** | **விற்பனை விலை (ரூ.)** | **அட்டை வைத்திருப்பவர்களுக்கான 5% கழிவு** |
|---|---|---|---|---|---|---|---|
| பால் | ரண்சோர் | டெய்றிகோ லிமிட். | 1,000 | 123456789012 | 2016.07.11 | 810.00 | ஆம் |
| பால் | டெல்மோ | டெய்றிகோ லிமிட். | 400 | 123456789013 | 2016.01.26 | 325.00 | ஆம் |
| பால் | நியு டெலா | டெய்றி பு'ட்ஸ் லிமிட். | 400 | 623455789119 | 2016.05.11 | 310.00 | இல்லை |
| வெண்ணெய் | ரண்சோர் | டெய்றிகோ லிமிட். | 227 | 123456783321 | 2016.04.12 | 495.00 | ஆம் |
| வெண்ணெய் | நியு டெலா | டெய்றி பு'ட்ஸ் லிமிட். | 200 | 123456781201 | 2016.06.11 | 290.00 | இல்லை |
| பாலாடைக் கட்டி | ஹப்பி கிராப்ட் | டாசென்ஸ் லிமிட். | 340 | 123456723233 | 2016.03.09 | 639.00 | ஆம் |
| யோகட் | நியு டெலா | டெய்றி பு'ட்ஸ் லிமிட். | 500 | 123452345563 | 2016.01.31 | 150.00 | ஆம் |
| பாலாடைக் கட்டி | சீடோ | டாசென்ஸ் லிமிட். | 250 | 123456782222 | 2016.03.16 | 945.00 | ஆம் |

மேலே உள்ள தரவுகளை மட்டும் கவனத்தில் எடுத்து, பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

(a) மேலேயுள்ள புலங்களில் (fields) பிரதான புலமாக கவனத்தில் எடுக்க வேண்டிய மிகப் பொருத்தமான புலத்தினைத் **தெரிவுசெய்க.** உங்கள் தெரிவின் பின்னால் உள்ள காரணத்தை **விளக்குக.** (02 புள்ளிகள்)

(b) கீழே தரப்பட்டுள்ள புலங்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான தரவு வகைகளை **அடையாளங் காண்க.**

| **புலத்தின் பெயர் (field Name)** | **தரவு வகை** |
|---|---|
| உற்பத்தி வகை | |
| உற்பத்திப் பெயர் | |
| வழங்குநர் | |
| எடை | |
| உலகளாவிய உற்பத்திக் குறியீடு | |
| காலாவதியாகும் திகதி | |
| உற்பத்தி விலை | |
| அட்டை வைத்திருப்போருக்கான 5% கழிவு | |

(08 புள்ளிகள்)

(c) நான்கு வகையான பொருட்கள் மட்டுமே விற்கப்படுவதாகக் கருதுக. அதிக வினைத்திறனுடன் தரவு உள்ளீட்டுச் செயன்முறையைச் செய்வதற்காக அட்டவணைக் கட்டமைப்புக்கு (table structure) செய்யப்படக்கூடிய ஏதாவது மாற்றங்களை **விளக்குக**. (02 புள்ளிகள்)

(d) விற்கப்படும் உற்பத்திப் பொருள் ஒன்றின் அதிகபட்ச எடை 5000 கிராம் எனவும் குறைந்தபட்ச எடை 100 கிராம் எனவும் கருதி, அதிக வினைத்திறனுடன் தரவு உள்ளீட்டுச் செயன்முறையைச் செய்வதற்காக அட்டவணைக் கட்டமைப்புக்கு செய்யப்படக்கூடிய மாற்றங்களை **விளக்குக.**

(03 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

*பகுதி B முடிவுற்றது*